



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

### மானியக் கோரிக்கை எண்.9

**அறிவிப்புகள்**
**2021–2022**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# சிறுபான்மையினர் நலன்

## மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2021–2022


## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

## 1. 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் 14 இலட்சம் ரூபாய் செலவில் நூலகம் ஏற்படுத்தப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் தலா ஒரு நூலகம் 14 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**2. 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்கப்படும்**

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 3. 14 சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 14 சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கில வழி பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்.

## 4. சிறுபான்மையினர் நல விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்

சிறுபான்மையினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**5. சிறுபான்மையினர் நல விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் பல்வகை செலவினத் தொகை இரு மடங்காக 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தி வழங்கப்படும்**

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தற்போதைய சூழலுக்கேற்ப பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

**6. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்**

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

## 7. சிறுபான்மையினருக்கு 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 1000 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் இலவசமாக வழங்கப்படும்.

## 8. தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் விடுதிக்கு சொந்த கட்டடம் 3 கோடியே 47 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்

சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி தேனி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் மாணவியர் விடுதிக்கு சொந்த கட்டடம் 3 கோடியே 47 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

**9. ஜெருசலேம் புனித பயணத்திற்கு அருட்சகோதரிகள் / கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு 37,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இப்புனித பயணத்திற்கு அருட்சகோதரிகள் / கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் 37,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாக 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

## 10. சிறுபான்மையினர் விடுதி மாணவ / மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்.

**11. உலாமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு மிதிவண்டிகள் 4 கோடியே 76 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்**

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பயனடையும் பொருட்டு, அவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 10,583 மிதிவண்டிகள் 4 கோடியே 76 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 12. அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம்/கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்

முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் மற்றும் ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக தேவையின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம்/கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவங்கப்படும்.

## 13. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிர்வாக மானியம் உயர்த்தப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியமாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப இந்நிர்வாக மானியம் உயர்த்தி வழங்கப்படும்.

## 14. வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரியத்தில் புதிதாக கட்டடம் கட்டப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் தனது பணிகளை திறம்பட மேற்கொள்ளும் வகையில் சென்னையிலுள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைமை அலுவலகத்திற்கு வக்ஃப் வாரிய நிலத்தில் புதிதாக கட்டடம் கட்டப்படும்.

## 15. 8 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃபுகளை பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் மற்றும் கண்காணிக்கவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குட்பட்ட, சொந்த அலுவலக கட்டடம் இல்லாத 8 சரக அலுவலகங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

**16. சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் 1 கோடியே 75 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்**

சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் கூடிய மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் 1 கோடியே 75 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்படும்.

## 17. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதை போன்று கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**

**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 1.